சுருக்கம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் - ஆலந்தூர், பல்லவபுரம் மற்றும் தாம்பரம் ஆகிய நகராட்சிகளுக்கு ரூ.44.21 கோடி மதிப்பீட்டில் வேங்கடமங்கலத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் - நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.2) துறை

அரசாணை (2ப) எண்.107 நாள்:30.7.2008.

படிக்க

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, கடிதம் எண்.ஆர்.ஓ.சி. எண்.76413/04/JNN1, நாள் 28.6.2008.

---

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், ஆலந்தூர், பல்லவபுரம் மற்றும் தாம்பரம் ஆகிய மூன்று நகராட்சிகளுக்கும் மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் நிதியுதவியுடன் ரூ.4947.00 இலட்ச மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை வேங்கடமங்கலத்தில் செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இதற்கென ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அத்திட்ட அறிக்கைக்கு 19.5.2008 அன்று நடைபெற்ற ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் மாநில அளவிலான ஒப்பளிப்பு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் மத்திய அரசின் நகர்ப்புர வளர்ச்சித்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்து என்றும் மேலும் 19.6.2008 அன்று நடைபெற்ற மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் மத்திய ஒப்பளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டத்தில் ( Central Sanctioning and Monitoring Committee ) சில நிபந்தனைகளுடன் ரூ.4421.25 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2. இத்திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்ட விதிமுறைகளின்படி கீழ்க்கண்ட நிதிப்பங்கீட்டில் செயல்படுத்தப்பட உள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| | மதிப்பீட்டுத் தொகை | ரூ.44.21 கோடி |
| 1. | மத்திய அரசு மானியம் (35%) | ரூ.15.47 கோடி |
| 2. | மாநில அரசு மானியம் (15%) | ரூ.6.63 கோடி |
| 3. | உள்ளாட்சி நிறுவன பங்களிப்பு (50%) | ரூ.22.11 கோடி |
| | மொத்தம் | ரூ.44.21 கோடி |

மேலும் உள்ளாட்சி நிறுவன பங்களிப்பு தனியார் நிறுவன பங்கேற்பின் மூலம் நிறைவேற்றப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலே பத்தி 1 மற்றும் 2-ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து ஆலந்தூர், பல்லவபுரம் மற்றும் தாம்பரம் ஆகிய மூன்று நகராட்சிகளுக்கும் மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.4421.25 இலட்சம் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை வேங்கடமங்கலத்தில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு முதன்மை செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வளர்ச்சி கழகம், சென்னை-35.
மண்டல நிர்வாக இயக்குநர், செங்கல்பட்டு.
ஆணையர்,ஆலந்தூர் / பல்லவபுரம் / தாம்பரம் நகராட்சி, சென்னை.
மாநில கணக்காயர், சென்னை-18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை-18.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, குறளகம்,
சென்னை-108.
நகல்: நிதி (நநிகுவ) துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வரவு செலவு/அந.2) துறை,சென்னை-9.

-/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/-

30/7/08

பிரிவு அலுவலர்